16.06.2026.

O.S.No. 28/2022

PW1– தங்கமணி – த/பெ. குத்தாலிங்கம்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 16.06.2026.

குறுக்கு விசாரணை : ( பிரதிவாதிகள் தரப்பில்)

1. நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன், நான் பழவியாபாரம் செய்துவருகிறேன். பிரதிவாதிகளின் எதிருரையை படித்துப்பார்த்துள்ளேன். 2ம் பிரதிவாதி எனது உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் மனைவி என்றால் சரிதான்.

2. வழக்கு தாக்கல் செய்யும் காலத்தில் நானும், பிரதிவாதிகளும் ஒரே வீட்டில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் எனது பிராதில் பிரதிவாதிகளின் விலாசமும், எனது விலாசமும் ஒரே வீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது தவறாக உள்ளது. பிராது தாக்கல் செய்யும் சமயத்தில் நான் எனது பிராதில் குறிப்பிட்டுள்ள முகவரியில்தான் குடியிருந்துவந்தேன்.

3. அந்த முகவரியில் எனதுபெற்றோர்கள் குடியிருந்து வருகிறார்கள். வழக்கு சொத்து ஆதியில் அருளானந்தம் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 1ம் தபசில்சொத்திற்கு தென்புறமுள்ள சொத்தை 08.09.2003ல் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை நான் படித்துப்பார்த்துள்ளேன். அந்த ஆவணத்தின்படி 2ம் தபசில்சொத்தில் அவர்களுக்கும் உரிமை உண்டு என்றால் சரிதான்.

4. பிராது 1ம் தபசில் சொத்தை 08.09.2003ம் தேதியில் 1ம் பிரதிவாதியின் கிரையத்திற்கு பின்பு எனது தாய் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அதன் மூலமாக எனது தாய்க்கு 2ம் தபசில் சொத்தில் பொதுப்பாதை உரிமை ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் தபசில்சொத்தில் 1ம் பிரதிவாதி,எனது தாயை தவிர வேறு யாருக்கும் உரிமை இல்லை.

5. என் உடன்பிறந்தவர்கள் மொத்தம் 4ஆண்மக்கள், 3 பெண்மக்கள். 1ம் தபசில் சொத்தை எனது தாயிடம் இருந்து நான் நன்கொடை ஆவணம் மூலம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். 1ம் தபசில் சொத்தை எனக்கு எழுதிக்கொடுத்த சமயத்திலும், தற்போது வரையிலும் எனது தாய்தான் அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரிதான். நான் 1ம் தபசில் சொத்தை அனுபவம் செய்துவரவில்லை என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்படும் சமயத்தில் எனக்கும், எனது சகோதர , சகோதரிகளுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணத்திற்கு பின்பு 2ம் பிரதிவாதி தனக்கும் அதில் பங்கு உண்டு என பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல. நான் எனது தாயை ஏமாற்றி எழுதிவாங்கினேன் என்றால் சரியல்ல. அதனால்தான் பிராது 1ம் தபசில் சொத்தின் அனுபவம் எனக்கு வரவில்லை என்றால் சரியல்ல. அதனால் நன்கொடை ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல.

7. பிராது 2ம் தபசில் சொத்தில் எந்த ஆக்கிரமிப்பும் இல்லை என்றால் சரியல்ல, ஆக்கிரமிப்பு உள்ளது. பிரதிவாதிகள் 2ம் தபசிலில் 2 அடி

அகலத்தில் ஆக்கிரமிப்பு செய்து சிலாப், ஜன்னல் மற்றும் கழிவுநீர் கசியும்படி செய்கிறார்கள். வழக்கு தாக்கல் செய்யும் முன்பே மேற்படி ஆக்கிரமிப்பு இருந்தது என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் செயலுறுத்துக்கட்டளை கோரவில்லை என்றால் சரியல்ல.

8. எனவே 2ம் தபசில்சொத்தை அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் முன்பே ஆக்கிரமிப்பு எவ்வாறு இருந்ததோ அவ்வாறுதான் தற்போதும் உள்ளது என்றால் சரிதான். எனவே நான் கோரியுள்ள நிரந்த மறியல் கட்டளை எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லைஎன்றால் சரிதான்.

9. நான் வழக்கறிஞர் ஆணையைரை நியமித்தால் பிராதுதபசில் சொத்துக்களின் ஸ்தல அமைப்பு, ஆக்கிரமிப்பு தெரியவரும் என்பதால் தான் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள தாக்குதல் தொடர்பானவை பொய் என்றால் சரியல்ல. ஆம்புலன்ஸ்-ல் செல்லும்படியான காயம் ஏற்பட்டது எனது பிராதில் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல.

10. எனது வீட்டிலிருந்து செங்கோட்டை அரசுமருத்துவமனைக்கு சரவணன் ஆட்டோவில் வந்தேன் என்றால் சரிதான். ஆம்புலன்ஸ்-ல் நான் வந்ததாக பிராதிலும், முதல்விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளது தவறு என்றால் நான் ஆட்டோவில் சென்றேன். நான் பிரதிவாதிகளை கஷ்ட நஷ்டப்படுத்த வேண்டும் என்பதற்காக வம்பாக

வழக்கு தாக்கல் செய்துளளேன் என்றால் சரியல்ல. எனக்கும், 1ம் தபசில் சொத்திற்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

11. வா.சா.ஆ.3 ஆவணத்தின் அடிப்படையில் 14.06.2022ம் ஆண்டு வினோத் என்பவருக்கு நான் கிரைய ஆவணம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். பிராது 1ம் தபசில் சொத்தின் உரிமை ஆவணம் அனைத்தும் வினோத் பெயரில்தான் உள்ளது என்றால் சரிதான், எனது பெயரில் இல்லை என்றால் சரிதான். மேற்படி வினோத் பிராது 1ம் தபசில் சொத்தின் அடிப்படையில் தனியார் நிறுவனத்தில் அடமானக்கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தில் எனக்கு எந்த உரிமையும், அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**